# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

FIFTH SEMESTER – NOVEMBER 2016

**TL 5403 - SIDDHA MEDICINE IN TAMIL LITERATURE**

Date: 11-11-2016 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00-12:00

**பகுதி - அ (10 x 2 = 20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. இந்திய மருத்துவம் எனும் தலைப்பில் குறிக்கப்பெறும் மருத்துவ முறைகள் எவை?
02. தொடக்கக்கால சித்த மருத்துவ அறிஞர்களின் பெயர்களைக் குறிக்க.
03. ஆதுலர் சாலைகள் - குறிப்பு வரைக.
04. நோய், பிணி - தொல்காப்பியம் தரும் பொருள் யாது?
05. உலக மக்களிடையே நிலவி வரும் நான்கு வகை உணவுமுறையைக் குறிக்க.
06. சமணர்களின் நால்வகைத் தானங்கள் யாவை?
07. முகட்டுச் சட்டம், பண்டாரம், அத்திப்பழம், மூங்கில் - இச்சொற்களுக்குத் திருமந்திரம் தரும் பொருள் யாது?
08. ‘செம்பஞ்சுக்குழம்பு’ என்றால் என்ன? அதன் மருத்துவக் குணத்தை எழுதுக.
09. தைலத்தோணியிடல் என்றால் என்ன?
10. மூச்சு எத்தனை நிலைகளை உடையது? அவை யாவை?

**பகுதி - ஆ (5 x 7 = 35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.**

11. சித்த மருத்துவத்தின் சிறப்புத்தன்மைகளையும், அலோபதி மருத்துவம் வேகமாகப் பரவியதற்கானக் காரணங்களைத் தொகுக்க.
12. சித்த மருத்துவத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது ஆயுர்வேதம் என்ற கருத்தை ஆய்க.
13. பழந்தமிழர் உணவுமுறையின் சிறப்புத்தன்மைகளை விளக்குக.
14. காப்பியங்கள் வழி அறியவரும் மருத்துவக் கருத்துகளைத் தொகுக்க.
15. சமய இலக்கியங்கள் உணர்த்தும் மருத்துவ நெறிமுறைகள் யாவை?
16. தேனின் வகைகளைக் கூறி அதன் மருத்துவக் குணங்களை எழுதுக.
17. மருத்துவப் பழமொழிகளைத் தொகுக்க.

**பகுதி - இ (3 x 15 = 45 மதிப்பெண்கள்)**

**மூன்று பக்க அளவில் விடையளிக்க.**

18. சித்த மருத்துவத்தின் தோற்றம் வளர்ச்சிக் குறித்து விவரிக்க.

    **( அல்லது )**

    ஐவகை நில மக்களின் உணவு, உடை, உறையுள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
19. ‘மருந்து’ அதிகாரத்தின் வழி திருவள்ளுவர் குறிப்பிடும் உணவு நெறிமுறைகளைத் தொகுக்க.

    **( அல்லது )**

    திருமந்திரத்தில் காணப்பெறும் பல்வேறு மருத்துவக் கருத்துகளைத் தொகுக்க.
20. சிறப்பு யோகாசனங்கள் செய்யும் முறைகள், பயன்கள் பற்றி விவரிக்க.

    **( அல்லது )**

    தியானம் செய்யும் முறைகள், பயன்கள் குறித்து விளக்குக.

**********